உ
துர்க்காதேவி துணை



2006/12/06

தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## நிர்வாகசபை ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்கு அறிக்கையும்

## 01-01-2005 - 31-12-2005

❖

தெல்லிப்பழை
2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை - 2005

### தர்மகர்த்தா சபை

துர்க்கா துரந்தரி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
(தலைவர்)

Dr . தி. திவாகரன்

திரு.பா.பாலகாங்கேயன் U.S.A

திரு.க. ஜனநாயகம் U.K

திரு. நா. திருநாவுக்கரசு J.P
(கொல்லங்கலட்டி)

திரு சி.சண்முகானந்தன் G.S.O

Dr. ந. புவனேந்திரன் U.K

திரு நா. தவநாதன்
(இணைச் செயலாளர்)

திரு. அ.சண்முகநாதன்
(நிர்வாகப் பொருளாளர்)

### நிர்வாகசபை சபை

துர்க்கா துரந்தரி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
(தலைவர்)

திரு. மு.சபாநாதன் J.P.U.M.
(பதில் நீதிபதி, உப - தலைவர்)

திரு. சி.அருளானந்தசிவம்
(உப - தலைவர்)

Dr . தி. திவாகரன்
(பொதுச் செயலாளர்)

திரு நா. தவநாதன்
(இணைச் செயலாளர்)

திரு. ஆறு.திருமுருகன் B.A
(இணைச் செயலாளர்)

திரு. அ.சண்முகநாதன்
(பொருளாளர்)

திரு. சு.ஏழூர்நாயகம்
(உப - பொருளாளர்)

திரு. ந.செல்வநாயகம்
திரு. ச.ஆறுமுகநாதன்
திரு. ச.விநாயகரத்தினம்
திரு. நா.தவமணிநாயகம்
திரு. மு.அருளையா
திரு. ச.கந்தையா
திரு. சு.முருகையா
திருமதி. கலாதேவி பொன்னம்பலம்
திரு. சி.புஸ்பநாதன்
(கொழும்புப் பிரதிநிதி)
திரு. நா.சிவநாதன்
(இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/938

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

## ஆண்டறிக்கை - 2005

01-01-2005 தொடக்கம் 31-12-2005 வரை

**துர்க்கை அம்பாளின் திருவருள் வேண்டுதல் செய்து.**

அருள்மிகு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2005ஆம் ஆண்டிற்கான அறிக்கையினையும் 01-01-2005 தொடக்கம் 31-12-2005 வரையிலான நிதி வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையும் வழமை போல் இவ்வருடமும் அம்பாளின் அடியவர்களின் கவனத்துக்கு சமர்ப்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இவ் அறிக்கை தேவஸ்தானத்தின் முப்பத்தொன்பதாவது ஆண்டு நிர்வாக அறிக்கையாக வெளியிடப்படுகின்றது.

**நிர்வாகசபை**

தேவஸ்தானத்தின் நிர்வாகசபை 1966ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டு தொடர்ச்சியாக 39 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. இச்சபையின் தலைவராக பெரும் மதிப்பிற்குரிய துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 01-01-1966ஆம் ஆண்டு தொடக்கம் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனாதிகாரியாக கடமை புரிந்து 20-01-1977 ஆம் ஆண்டு தொடக்கம் நிர்வாக சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இன்றுவரை கடமை புரிந்து வருகிறார். அவரின் தலைமையில் நிர்வாகசபைக் கூட்டம் மாதந்தோறும் பெரும்பாலும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையில் காலை 9-30 மணியளவில் நடைபெற்று வருவதும் அக்கூட்டத்துக்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் யாவரும் நேரந்தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகமளித்து கூட்டம் ஒழுங்காகவும், சுமுகமாகவும் நடைபெறுவதற்கு பூரண ஒத்துழைப்பு நல்குவது சிறப்புக்குரிய அம்சமாகும். இவ்வாண்டு அம்மையாரின் 80வயது பூர்த்தியடையும் ஆண்டாக இருப்பதாலும் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது பொன் விழாவையொட்டி யாழ் தேசியக்கல்லூரியின் அனுசரனையுடன் 15-07-2005 வெள்ளிக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாயில் நடைபெற்ற விழாவில் "தெய்வத்திருமகள்" விருதும் பொன்னாடையும் போர்த்து கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். நிர்வாக சபையில் உறுப்பினராக இருந்த திரு சி.குமாரசாமி அவர்களின் இடத்துக்கு திருமதி கலாதேவி பொன்னம்பலம் அவர்கள் 23-01-2005 தொடக்கம் நிர்வாகசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வருடம் மாதாந்தம் ஒரு நிர்வாகசபைக் கூட்டம் என்ற ரீதியில் 12 நிர்வாகசபைக் கூட்டங்களும் 03 உப-சபைக் கூட்டங்களும் நடைபெற்றன.

## சிவாச்சாரியார்கள் அந்தணப் பெருமக்களின் பணிகள்

எமது தேவ்ஸ்தானத்தின் நித்திய நைமித்திய பூசைகள் கிரமமாகவும், நேர ஒழுங்கின் படியும் சிறப்பாக நடை பெறுவதற்கு சிவாச்சாரியார்களினதும் அந்தணப் பெருமக்களினதும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கின்றது.

எமது தேவஸ்தானத்தில் 01-06-1981 தொடக்கம் நியமனம் பெற்று பிரதம சிவாச்சாரியாராக கடமையாற்றிய சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் தேவஸ்தான இல்லத்தில் தங்கியிருந்து நித்திய நைமித்திய கிரியைகள், மகோற்சவம், திருமண வைபவங்கள் ஆகியவற்றை சிறப்புடன் நடாத்தி தமது சொந்த ஆலயத்தை நிர்வகிக்க வேண்டி 15-09-2005ல் தமது சொந்த விருப்பத்தின் பேரில் விலகியுள்ளார். அவர் எமது தேவஸ்தானத்தில் கடமையாற்றிய காலத்தில் செய்த அளப்பரும் சேவைக்கு எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் 1978ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றி 1989 தொடக்கம் உதவி சிவாச்சாரியாராக கடமையாற்றி 01-01-2006 தொடக்கம் பிரதம சிவாச்சாரியாராக பதவியைப் பொறுப்பேற்று நித்திய நைமித்திய கிரியைகளை நேர ஒழுங்கின் படி செவ்வனே ஆற்றி வருகின்றார். அவரின் ஆத்மீகப் பணிக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ சு.செந்தில்ராஜக்குருக்கள் ஆலயத்தில் நடை பெறும் முக்கிய விழாக்கள் மற்றும் விசேட தினங்களில் தவறாது பங்கு பற்றுவதுடன், குறிப்பாக மகோற்சவம், கேதார கௌரி நோன்பு, நவராத்திரி விழா, ஸ்ரீ சக்கரப்பூசை, சங்காபிஷேகம் போன்ற விழாக்களில் சர்வசாதகராக கடமையாற்றுவதுடன் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தேவஸ்தானத்தில் தங்கியிருந்து அபிஷேகம், நித்திய நைமித்திய பூசைகள் உரிய நேரத்திற்கு நடைபெற அதற்கு தேவையான முன் ஆயத்தங்களையும் நித்திய நைமித்திய கிரியைகளுக்கு உதவி புரிந்து வருகின்ற பிரம்மஸ்ரீ சு.சுந்தராஜசர்மா வுக்கும், 01-10-2005 தொடக்கம் நியமனம் பெற்று இக்கடமைகளைச் செய்து வரும் அச்சுவேலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ இ.பிரசன்னவதன சர்மாவுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த பிரமஸ்ரீ கி.கணேசமூர்த்திசர்மா நித்திய நைமித்திய கிரியைகள், பூசைகள், விழாக்கள் போன்றவை சிறப்பாகவும் நடைபெறவும் பாகசாலைப் பணிகளையும் செம்மையாயக ஆற்றி வருவதற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தேவஸ்தானத்தில் வாரந்தோறும் நடைபெறும் செவ்வாய் கிழமை திருவிழாக்கள், மகோற்சவம், இலட்சார்ச்சனை, கேதார கௌரி நோன்பு, நவராத்திரி விழா போன்ற விசேட விழாக்களிலும் ஏனைய விசேட வைபவங்களிலும் சமயாசமயப் பணிகளை சிறப்புடன் ஆற்றிவருகின்ற சிவஸ்ரீ சோ.ரஜிதகிரிதரக்குருக்கள், பிரம்மஸ்ரீ சு. லகுதரசர்மா, பிரம்மஸ்ரீ ந.இராமச்சந்திரசர்மா ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நித்திய நைமித்திய கிரியைகள் அபிஷேகங்கள் செவ்வனே ஆற்றுவதற்கு குறிப்பிட்ட நேரத்தில் திரவிய பாகங்களை உரிய முறையில் ஒழுங்கு செய்வதுடன் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக வுள்ள சிவத்திரு சி.ஈஸ்வரதாஸ் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தேவஸ்தான உத்தியோகத்தர்கள் பணியாளர்களின் சேவை.

எமது தேவஸ்தானத்தில் 1979ம் ஆண்டு தொடக்கம் நிதி அலுவலக உத்தியோகத்தராக தேவஸ்தானத்தில் நிரந்தரமாக தங்கி யிருந்து முழுநேரப் பணியாளராக கடமையாற்றும் சைவத்திரு கா.சிவபாலன் நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெறு வதை கண்காணித்து வருவதுடன் தேவஸ்தானத்திற்கு கிடைக்கும் நிதி மற்றும் அன்பளிப்புக்களுக்கு உடனுக்குடன் பற்றுச் சீட்டுக்கள் பதிவதுடன் உள்வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதிலுடன் பற்றுச் சீட்டுக்களை அனுப்புவதுடன் மாதாந்தக் கூட்டத்திற்கு வரவு செலவு அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதிலும் பெரும் பங்காற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றதை நன்றியுடன் பாராட்டுகின்றோம். நிதி அலுவலகப் பணிகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய உதவிபுரிகின்ற திரு. வ. நடராசா, திருமதி. ம. உதயகுமார் மற்றும் தேவஸ்தான கணக்குகளைப் பேரேட்டில் பதிந்து பரீட்சை மீதி தயாரிப்பதற்கு உதவிபுரிகின்ற செல்வி ச. ரேவதி அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திரு வி. சிவகுமாரன் ஆலயப்பணிகள் செவ்வனே நடைபெற அபிஷேகப் பொருட்கள் மற்றும் திருமணம், அன்னதானம் ஆகிய வற்றிற்கான பொருட்களை கொள்வனவு செய்தல் போன்றவற்றினை கவனித்து வருவதுடன் துர்க்கா மணிமண்டபப் பணிகளிலும் தனது சேவையினைச் செய்துவருகிறார். அவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய உள்வீதி சுத்தம் களஞ்சியப் பணிகளிலும் உதவி புரிந்து வருகின்ற திருவாளர்கள் வை. கணேசானந்தன், பொ. பால குமார், ந. பரமேஸ்வரன், இ. குணசேகரம் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய வெளிவீதிகள் புனிதமாக இருப்பதற்கு துப்பரவு, தோட்டப் பராமரிப்பு கோசாலை மற்றும் ஆலய அன்றாட கருமங்கள் செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு தருகின்ற திருவாளர்கள் சி. சண்முகானந்தன், பொ. தியாகராசா, வ. கந்தையா, க. கிருஷ்ணகுமார், நீ.நாகமுத்து, வே. பாக்கியமுத்து, ந. பரமேஸ்வரன், சி. நாகர், த. கந்தையா ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

## வருடாந்தம் மகோற்சவப் பெருவிழா 2005

வருடந்தோறும் நடைபெறும் மகோற்சவப் பெருவிழா இம்முறை 04-09-2005 ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16-09-2005 வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கலுடன் நிறைவு பெற்றது. வழமைபோல் இவ்வருடமும் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் கொடியேற்றத்தை பக்தி பூர்வமாக நிறைவேற்றி தொடர்ந்து ஏனைய திருவிழாக்களையும் நிறைவேற்றிக் கொண்டு வந்தார். 14-09-2005 புதன் கிழமை தேர்த்திருவிழா பகலின் போது பிரதம சிவாச்சாரியாரின் மகன் பிரம்மஸ்ரீ சு. சபாநாதசர்மா அகால மரணமடைந்த காரணத்தால் மேற் கொண்டு மகோற்சவ கிரியைகளை அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. தடைப்பட்ட மகோற்சவ கிரியைகளை குறிப்பாக கொடியிறக்ககத்தை பூரணமாக நிறைவேற்ற வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை எமது நிர்வாகத்திற்கு ஏற்பட்டது. இவ் மகோற்சவத்திற்கு பங்கம் ஏற்படாதவகையில் சிவஸ்ரீ வி. நாராயணக்குருக்களின் ஆலோசனையின் பேரில் உதவி சிவாச்சாரியாராக இருந்த சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள், சங்கற்பத்தை அன்றைய தினம் மேற்கொண்டு தேரடித் திருவிழா, தீர்த்த உற்சவம், கொடியிறக்கம், ஆகியவற்றை அமைதியாகவும் பயபக்தியுடன் நிறைவேற்றியுள்ளார். தேவஸ்தான நித்திய நைமித்திய கிரியைகளை தொடர்ந்தும் தற்போதும் அவர் மேற்கொண்டு வருகின்றார். இவ்வாண்டு கொடியேற்ற சங்கற்பத்தை நிர்வாகசபையின் சார்பில் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

தேவஸ்தான மகோற்சவம் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட மகோற்சவ விழாவாக அமைந்துள்ளமையால் மகோற்சவ கால பன்னிரண்டு தினங்களும் தேவஸ்தான சூழலில் வலிவடக்கு பிரதேச செயலக பணிமனை,சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வலிவடக்கு பிரதேசசபை மற்றும் தொண்டர் நிறுவனங்கள் ஆகியவை தற்காலிக பணிமனைகளை அமைத்து தங்களுக்கு பணிக்கப்பட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். வழமை போல் இம்முறையும் பெருந்திரளான அம்பாளின் பக்தர்கள் குடாநாட்டின் நாலாபுறத்திலிருந்தும் மகோற்சவ தினங்களில் பங்குபற்றி அம்பாளின் திருவருளைப் பெற்ற போதிலும் 14-09-2005 புதன்கிழமை நடைபெற்ற துக்ககரமான துயரச் சம்பவம் எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

இத்துயரச் சம்பவத்தினால் பெரிதும் பாதிப்புள்ளாகியுள்ள சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் மகனின் ஆத்மா சாந்திக்காக அம்பாளை பிராத்திக்கின்றோம்.

**இவ்வாண்டு மகோற்சவ வரவு செலவு விபரங்கள் கீழே தரப்படுகின்றது.**

| விபரம் | மகோற்சவ வரவு | மகோற்சவ செலவு |
|---|---|---|
| கொடியேற்றம் | 216781-50 | 37201-00 |
| உபயம் | 263029-00 | 346608-00 |
| பொது | 277812-00 | 494418-00 |
| மொத்தம் | 757622-50 | 878227-00 |

இவ்வாண்டு மகோற்சவ கணக்கால் வரவிலும் கூடிய செலவாக ரூபா 120604-50 சதம் செலவழிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட உற்சவங்களும் சமய நிகழ்ச்சிகளும்

### தைப்பொங்கல் தைப்பூச திருவிழாக்கள்

தைப்பொங்கல் திருவிழா 14-01-2005 வெள்ளிக்கிழமை சங்கிராந்தி தீர்த்தம், அபிஷேகம், பூசை, அம்பாள் திருவீதியுலா ஆகியனவும் தைப்பூசத் திருவிழா 25-01-2005 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

### அபிராமிப்பட்டர் விழா

இவ்விழா 1982ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் தைஅமாவாசை தினத்தன்று நடைபெற்று வருகின்றது. இவ்வருடம் இவ்விழா 08-02-2005 செவ்வாய்க்கிழமை அபிராமி அந்தாதி முற்றோதல்,விசேடபூசை ஆகியன இடம்பெற்று அம்பாள், அபிராமிப் பட்டர் திருவுருவம் திருவீதியுலாவும் நடைபெற்றது.

### மாசிமக இலட்சார்ச்சனை விழா

எமது தேவஸ்தானத்தில் இவ்விழா 1986ம் ஆண்டு தொடக்கம் மாசி மகத்தை முன்னிட்ட பத்து தினங்களும் காலை மாலை ஆகிய நேரங்களில் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு இவ்விழா 14-02-2005 திங்கட்கிழமை ஆரம்பமாகி 24-02-2005 வியாழக்கிழமை மாசிமகப் பெருவிழாவுடன் நிறைவு பெற்றது. இவ் இலட்சார்ச்சனை காலங்களில் வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், விசேட பூசை ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

### மகா சிவராத்திரி விழா

08-03-2005 செவ்வாய்க்கிழமை அபிஷேகமும் அடுத்தநாள் அதிகாலை பெண்கள் தொண்டர்சபையினரின் உபயமாக அபிஷேகமும் பாரணைப் போசனமும் நடைபெற்றன.

### வருடாந்த பங்குனிப் பொங்கல் விழா

தேவஸ்தானத்தில் மிகவும் பழமைவாய்ந்த விழாவாகக் கருதப்படும் இவ்விழாவானது ஒவ்வொரு வருடமும் பங்குனி மாத கடைசிச் செவ்வாய்க்கிழமை நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு இவ்விழாவானது 12-04-2005 செவ்வாய்க்கிழமை சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அன்றையதினம் அம்பாள் அடியவர்கள் அதிகாலை தொடக்கம் மாலைவரை பொங்கல் நேர்த்திகளைப் பூர்த்தி செய்தனர். பகல் திருவிழாவின் போது அம்பாள் உள்வீதியுலாவும் மாலைத் திருவிழாவின் போது உள்வீதியுலா வெளிவீதியுலா ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

## பார்த்திப வருடப் பிறப்பு விழா

பார்த்திப வருடப் பிறப்பு 14-04-2005 வியாழக்கிழமை அதி காலை அபிஷேகம் விசேட பூசையுடன் அம்பாள் எழுந்தருளி திருவீதியுலாவும் துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் சங்கிராந்தி தீர்த்தமும் நடைபெற்றன. அன்றையதினம் பெருந்திரளான பக்தர்கள் அபிஷேகம், பூசை விழாக்களில் கலந்து கொண்டு தமது புது வருடக் கருமங்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

## ஆடிச் செவ்வாய் விழாக்கள்.

எமது தேவஸ்தானத்தின் மிகவும் பழமை வாய்ந்த விழா வாகிய ஆடிச்செவ்வாய் விழாக்கள் ஏறக்குறைய முந்நூறு ஆண்டு களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. இவ்விழாவானது இவ் வாண்டு 19-07-2005, 26-07-2005, 02-08-2005, 09-08-2005,14-08-2005 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. இத்தினங்களில் காலை நேரத்தில் அபிஷேகமும் பூசையும், பகல் மாலை நேரங்களில் பூசையும் அம்பாள் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. இவ்வாடிச் செவ்வாய் தினங்களில் நாட்டின் நாலாதிசைகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகைதந்து தமது நேர்த்தியைப் பூர்த்தி செய்தனர்.

## நவராத்திரி விழாவும் மானம்பூ உற்சவமும்

எமது தேவஸ்தான வரலாற்றில் நவராத்திரி மானம்பூவிழா ஆகியவை பழமைவாய்ந்த விழாவாகக் கருதப்படுகின்றது. இவ்வருடம் இவ் விழா 04-10-2005 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 12-10-2005 புதன்கிழமை விஜயதசமி விழாவுடன் நிறைவு பெற்றது. விஜயதசமி விழாவன்று அம்பாள் வெளிவீதியுலா வன்னிவாழை வெட்டல், ஏடுதொடக்கல் கேதாரகௌரி நோன்பு ஆரம்பம் ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றன. நவராத்திரி பூசை நாட்களில் ஸ்ரீ சக்கரபூசையும் விசேடமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதார கௌரி நோன்பு

கேதார கௌரி நோன்பு எமது தேவஸ்தானத்தில் 1979ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும். இவ் ஆண்டு 12-10-2005 புதன்கிழமை ஆரம்பமாகி 01-11-2005 செவ்வாய்க்கிழமை பூர்த்தியடைந்தது. அன்றையதினம் கேதார கௌரி நோன்பினைப் பதிவுசெய்த அடியவர்கள் எல்லோரும் பூசையில் பங்குபற்றி கௌரி நூலைப் பெற்றனர்.

**கந்தசஷ்டி விழா.**

கந்த சஷ்டிவிழா 02-11-2005 புதன்கிழமை ஆரம்பமாகி 07-11-2005 திங்கட்கிழமை வரை ஒவ்வொருநாளும் பரிபால பாலசுப்பிரமணிய சுவாமிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்றது. கந்தசஷ்டி தினங்களில் கந்தபுராண வசனம் படிக்கப்பட்டது. பாரணையன்று அடியவர்களுக்கு பாரணைப் போசனம் வழங்கப்பட்டது.

**திருக்கார்த்திகை சர்வாலய தீப உற்சவம்.**

இவ்வருடம் சர்வாலய தீப பூசை 15-12-2005 வியாழக்கிழமை சர்வாலய தீபநாளில் அபிஷேகம் திருவிளக்கு பூசை அம்பாள் திருவீதியுலா, சொக்கப்பனை எரித்தல் போன்ற விசேட நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது.

**சமய குரவர், சந்தான குரவர் குரு பூசைகள்.**

சமய குரவர்களாகிய திருநாவுக்கரசு நாயனார், திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைகள் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் உபயங்களாக 03-05-2005, 26-05-2005, 10-07-2005, 12-08-2005 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. அதே போல சந்தான குரவர்களின் குருபூசைகளும் நடைபெற்றன.

**புராண படன நிகழ்வு.**

கொழும்புத்துறை தவ முனிவர் தவப்பெருந்திரு யோகர் சுவாமிகளின் அறிவுரைக்கு அமைய 1958 தொடக்கம் ஆலயத்தில் வருடந்தோறும் ஒன்று என்ற அடிப்படையில் மூன்று பெரும் புராணங்களான பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன கிரமமாகப் படிக்கப்பட்டு உரை செய்து பயன் கூறி வருவது குறிப்பிடத் தக்கது. அவ் வரிசையில் இவ்வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணம் 18-05-2005 புதன்கிழமை தொடக்கம் ஒவ்வொரு நாளும் படிக்கப்பெற்று 10-08-2005 திங்கட்கிழமை பூர்த்தி பெற்றது. புராணபடன நிகழ்வில் கலந்து கொண்ட சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், பௌராணிகர் சிவத்திரு சி. சண்முகவடிவேல், சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா உட்பட புராணம் செய்தோர் யாவரும் பூர்த்தி விழாவின் கௌரவிக்கப்பட்டனர்.அத்துடன் இவ் நிகழ்வில் கலந்து கொண்ட அடியவர்கள் எல்லோரும் மகேஸ்வர பூசையிலும் பங்கு பற்றினார்கள். ஆண்டுதோறும் நடை பெற்று வரும் புராண படிப்பிற்கானசெலவினை ஈடுசெய்யும் வகையில் சுன்னாகம் தேசியசேமிப்பு வங்கியில் ரூபா ஐந்து இலட்சம் நிலையான வைப்பில் அறக்கட்டளை நிறுவப்பட்டு (நிலையான வைப்புச் சான்றிதழ் இல 2/0072/10/67089) இடப்பட்டு வருடவட்டி முதிர்வின் போது இதற்காக பயன்படுத்தப் படவுள்ளது.

**விசேட உற்சவங்களின் வருமான செலவு விபரங்கள் கீழே தரப்படுகின்றது.**

| விபரம் | வரவு | செலவு | மேலதிகம் | குறைவு |
|---|---|---|---|---|
| இலட்சார்சனை | 225588-00 | 222240-00 | 3348-00 | |
| அபிராமிப்பட்டர் விழா | 10000-00 | 4520-00 | 5480-00 | |
| நவராத்திரி | 60800-00 | 81114-00 | | 20314-00 |
| கேதாரகௌரி நோன்பு | 359800-00 | 166659-00 | 193141-00 | |
| திருவிளக்குப் பூசை | 5100-00 | 4404-00 | 696-00 | |
| வரலட்சுமி நோன்பு | 89750-00 | 36743-00 | 53007-00 | |
| மொத்தம் | 751038-00 | 515680-00 | 255672-00 | 20314-00 |

**அன்னசத்திர அன்னதானப் பணி**

எமது தேவஸ்தானத்தில் வழமை போல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் ஆலயத்திற்கு வருகை தருகின்ற அடியவர்களுக்கு அன்னதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக வழங்கப்பட்டு வருகின்றது. அன்னதானப்பணிக்கு தனது நேரத்தையும் பொருளையும் செலவு செய்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற திரு.ச.ஆறுமுகநாதன் அவர்களை மனதாரப் போற்றுகிறோம். இதைத்தவிர எமது தேவஸ்தான மகோற்சவ பன்னிரண்டு தினங்களும் 04-09-2005 தொடக்கம் 16-09-2005 வரை அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் நல்லூர்க் கந்தனின் மகோற்சவ தினங்களில் 10-08-2005 கொடியேற்றம் தொடக்கம் 03-09-2005 தீர்த்தம் வரையிலான இருபத்தைந்து நாட்களும் நல்லூர் மணிமண்டபத்திலும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.

அன்னதானப்பணி சிறப்புற முழுஒத்தாசை புரிகின்ற நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர்சபை, மகளிர் இல்லப் பிள்ளைகள், சமயோசித தொண்டர்கள் மற்றும் அன்னதான பணிக்கு பொருளாகவோ பணமாகவோ ஆதரவு வழங்குகின்ற வர்த்தகப்பெருமக்கள் அன்பர்கள் யாவருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதுடன் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**இவ்வருட அன்னதான வரவு செலவு விபரங்களை சமர்ப்பிக்கின்றோம்.**

| **2005 வரவு** | **வரவு** | |
|---|---|---|
| துர்க்காதேவி ஆலயம் | 2265038.85 | |
| துர்க்காதேவி மகோற்சவகாலம் | 445205.00 | |
| நல்லூர்மணிமண்டப நல்லைக்கந்தன் மகோற்சவகாலம் | 526650.00 | |
| மொத்தம் | 3236893.85 | கிடைத்துள்ளது |

| **2005 செலவு** | | |
|---|---|---|
| துர்க்காதேவி ஆலயம் | 1011993.00 | |
| துர்க்காதேவி மகோற்சவகாலம் | 470005.50 | |
| நல்லூர்மணிமண்டப நல்லைக்கந்தன் மகோற்சவம் | 502303.00 | |
| | 1984301.50 | செலவழிக்கப் பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமகள் அழுத்தகப் பணி.

01-04-1989ல் தேவஸ்தானத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மிகவும் பிரபல்யம் வாய்ந்த அச்சகமாக விளங்கிய சுன்னாகம் திருமகள் அழுத்தகம் 1995ல் நாட்டில் ஏற்பட்ட இடப் பெயர்வினால் வேலைகள் சீராக நடைபெற முடியவில்லை எனினும் அவ் அச்சக முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் நன் முயற்சியால் 1996ம் ஆண்டு தொடக்கம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள தனியார் வீட்டில் இயங்கிவந்துள்ளது. (தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக09-06-2006 தொடக்கம் தேவஸ்தான சூழலில் அன்னையர் இல்லத்திற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.)

தற்போது பெரும்பாலும் அச்சுப்பதிவுகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்ட காரணத்தாலும் பல இடங்களிலும் கணனி ஓவ்செற் பொறிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாலும் தற்போது வெளி வேலைகள் குறைவாக கிடைக்கின்றன. எனினும் எமது அச்சகத்தின் பயன்பாட்டிற்கு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற "ஓவ்செற்" பொறிகளைப் பயன்படுத்தி எமது தேவஸ்தானம் மகளிர் இல்லம் சம்பந்தமான அச்சுவேலைகள் பெரும்பாலும் செய்யப்படுகின்றது. அத்துடன் எமது தேவஸ்தானத்தால் மாதாந்த வெளியீடான சமய சஞ்சிகை "அருள்ஒளி" அச்சுவேலைகளும் இவ் அச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

## யாத்திரிகர் விடுதி.

எமது தேவஸ்தானத்திற்கு வெளியிடங்களிலிருந்து வரும் அடியவர்கள் தங்கியிருந்து அம்பாளை வழிபடவும் அவர்களின் வசதி கருதி தேவஸ்தானத்திற்கு தெற்கு புறமாக அழகான விடுதி அமைக்கப்பட்டு 16-08-2004ல் அம்மையார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. யாத்திரிகர் விடுதி கட்டடத்திற்கு மொத்தமாக ரூபா 9,070,770.00 செலவு செய்து பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடுதியின் சுத்தம் பூந்தோட்ட பராமரிப்பு வேலைகளையும் பாதுகாப்பு கடமைகளையும் திரு .சி. சண்முகானந்தன், திரு. த. கந்தையா ஆகியோர் கவனித்து வருகின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அடியவர்களுக்கு இவ்விடுதியில் அன்னதானம் வழங்கப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் ஒளி சஞ்சிகை.

எமது தேவஸ்தானத்தினால் சமயப் பிரசாரப் பணியை செய்யும் பொருட்டு மாதாந்த சஞ்சிகையாக "அருள் ஒளி" 2002ம் ஆண்டு மகோற்சவ தீர்த்த உற்சவ தினத்தில் முதன்முதலாக வெளியீடு செய்யப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை அச் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டு இவ்வாண்டு அச்சிடல் செலவு உட்பட வெளியீட்டு செலவாக ரூபா 316890.00 செலவழிக்கப்பட்ட போதிலும், ரூபா 100900.00 மாத்திரம் வருமானமாக கிடைத்துள்ளது. மாதாந்த சஞ்சிகை அச்சுக்கூலி முகப்பு அட்டை அச்சிடுதல் போன்ற செலவுகள் கூடுதலாக இருந்த போதிலும் எல்லோருக்கும் பயன்தரக் கூடிய வகையில் மானியமாக ரூபா 20/=வுக்கு சஞ்சிகை ஒன்று விற்பனை செய்து வரப்படுகின்றது.

## பொது அன்பளிப்புக்கள்.

எமது தேவஸ்தானத்தால் வருடந்தோறும் பல்வேறுபட்ட வகையில் சமூக நலனுக்காக உதவி புரிந்து வருகின்றது. இவ்வகையில், விழிப்புலனற்றோர், கல்வி, நோயாளர், பாடசாலைகளின் பரிசளிப்பு மற்றும் மெய்வல்லுனர் போட்டிகள் ஆலய திருப்பணிகள், ஆதரவற்றோர், அபரக்கிரியைகள் மங்கல நிகழ்வுகள் ஆகியவற்றிற்கு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டு வரப்படுகின்றது. 2005ம் ஆண்டு பொது அன்பளிப்புக்களாக ரூபா 1190507.50 சதம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை கடந்த வருடத்தைவிட ரூபா 385172.50 சதம் கூடுதலாக உள்ளது. இதற்குரிய விபரங்கள் குறிப்பு 07ல் இடம் பெறுகின்றது.

## உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவு.

எமது தேவஸ்தானத்தில் நித்திய நைமித்திய பூசைகள் விழாக்கள் ஆக்கபூர்வமான திருப்பணிகள் சமுதாய நலப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ள உள்நாட்டு அன்பர்கள், நலன் விரும்பிகள், அடியவர்கள் நேரிலோ அல்லது வங்கி மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ தாராளமாக உதவி வருகின்றார்கள். இம் முறையில் ஆதரவுவழங்கி வரும் அனைவருக்கும் பராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வகையில் இவ்வருடம் ரூபா 50000/= க்கு மேற்பட்ட அன்பளிப்புக்கள் வழங்கிய அன்பர்களின் விபரங்களை தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திருமதி. எஸ். பாலகுமார் அமெரிக்கா

2. திரு. தி. ஜெயச்சந்திரன் பலாலி வீதி கோண்டாவில் கிழக்கு

3. திருமதி. ரோகினி பரதன் அவுஸ்ரேலியா

4. திரு. செல்லையா செல்வரத்தினம் தொல்புரம் கிழக்கு சுழிபுரம்

**பெண்கள் தொண்டர் சபை.**

தேவஸ்தானத்தில் சரியைத் தொண்டுகளில் ஈடுபடுவதற்காக 1980 ஆம் ஆண்டு தைத்திங்கள் எமது தேவஸ்தான தலைவரைத் தலைவராக கொண்டு பெண்கள் தொண்டர் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இச்சபையின் உறுப்பினர்கள் நாளாந்த பூசை, விசேட உற்சவ காலங்களில் பூசைப் பொருட்களை ஆயத்தம் செய்தல் மற்றும் பூசைப் பாத்திரங்களை விளக்குதல், உள்வீதி சுத்தம் போன்ற சரியைத் தொண்டுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இச்சபையின் வெள்ளிவிழா 06-03-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்ன பூரணி மண்டபத்தில் தேவஸ்தான தலைவரின் தலைமையில் நடை பெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக நுன்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி A.N. கிருஷ்ணவேணி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருமதி. ஆனந்தஜோதி தர்ஷனனின் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழா இறுதியில் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.**

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தேவஸ்தானத்துடன் நெருங்கிய தொடர்புடைய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் ஆலயத்தில் சரியைத்தொண்டினை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத் தக்கது. தேவஸ்தான பணிகளுக்கு உதவும் வகையில் செவ்வாய்க் கிழமை, மகோற்சவம் மற்றும் விசேட தினங்களிலும் அன்னதானப் பணிகளிலும் ஆற்றிவரும் சேவைகள் பாராட்டுக்குரியதாகும். மேற்படி சங்கத்தின் பிரதிநிதியாக திரு. நா. சிவநாதன் நிர்வாகசபை உறுப்பினராக பணியாற்றிவருகின்றார். சங்கத்தின் பணிகள் மென்மேலும் உயர் வடைய பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி அவர்களின் 80வது பிறந்தநாள் அறக்கொடை விழா.**

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சிய வாழ்க்கை யினை மேற்கொண்டு வாழ்கின்ற அம்மையாரின் 80வது பிறந்தநாள் அறக்கொடை விழா தேவஸ்தானம் கொழும்பு, மற்றும் புலம் பெயர்ந்து எம்மவர்கள் அதிகமாக வாழ்கின்ற கனடா, ஜெர்மனி, இலண்டன் ஆகிய நாடுகளிலும் சிறப்பாக நடைபெற்றது.

எமது தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இவ் அறக்கொடை விழா 07-01-2005 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு விசேட பூசை வழிபாட்டுடன் முற்பகல் 9-00 மணியளவில் விழா ஆரம்பமானது.

வரவேற்புரையை தேவஸ்தான உபதலைவர் திரு. மு.சபாநாதன் அவர்கள் நிகழ்த்தினார். ஆசியுரைகளை தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்களும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கினர்.

வாழ்த்துரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர் களும் முன்னுரையை அறக்கொடை நாயகி அவர்கள் நிகழ்த்தினர். இவ்விழாவில் பிரதம விருந்தினராக உயர்திரு. தெய்வநாயகம் பிள்ளை ஈஸ்வரன் (மொறிசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவரும் சிறந்த அறக்கொடை வள்ளலும்) கலந்துகொண்டு சிறப்பித்தார்.

"வாழ்க எம் அன்னை" வெளியீட்டுரையை கலாநிதி குமார சாமி சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற தேசிய கல்விநிறுவன உப பணிப் பாளர் நாயகம் அவர்களும், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் வெளியீட்டுரையை யாழ்பல்கலைக் கழக துணைவேந்தரும் நிகழ்த் தினார்கள்.

சுந்தரத்தமிழின் தெய்வீக மணத்தை சைவ உலகு நுகர வேண்டும். என்ற நன் நோக்கத்துடன் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த ஏழாந் திருமுறையாகிய தேவாரம் அறநிதிய சபையினால் வெளியிடப்பட்டது இவ்விழாவில் சிறப்பம்சமாகும். அறக்கொடை நிகழ்வில் இம்முறை யாழ்பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடத்தின் சார்பில் பேராசிரியர் எஸ். சிவபாலன் அவர்களும், தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்று நோய் வைத்திய சாலையின் சார்பில் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்களும், தலா ஒரு இலட்சம் வீதம் அன்பளிப்பாக பெற்றுக் கொண்டனர். துர்க்காபுர மகளிர் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சியும் செஞ்சொற்செல்வர் திரு ஆறு. திருமுருகன் அவர்களின் நன்றியுரையுடன் விழா சிறப்பாக நிறைவேறியது. விழாவில் பங்கு பற்றிய அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது.

மேலும் சிறப்பாக ஜெர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையும், சிவத்தமிழ் சஞ்சிகையும் இணைந்து வழங்கும் சிவத் தமிழ் விழா தாயகத்தில் 10-01-2005ல் பி. பகல் 3-30 மணிக்கு எமது தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்புரைகளை நல்லை ஆதீன முதல்வர், அருட்கவி கலாநிதி விநாசித்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் சு. மோகனதாஸ், திருமதி. நாச்சியார் செல்வநாயகம், திருமதி கலைவாணி இராமநாதன், பிரம்மஸ்ரீ சி. சரவணபவன் (சிற்பி) கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி வெற்றிமணி மு.க.சு சிவகுமாரன், விழாநாயகி அவர்களும் நிகழ்த்தினார்கள். இவ்விழாவின் போது கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் “காலம் தந்த கை விளக்கு” நூல் வெளியீடும் கலாநிதி வெற்றிமணி மு.க.சு. சிவகுமாரனின் சிவத்தமிழ் நூல்களின் வெளியீடும் வெற்றிமணி ஆசிரியரின் முயற்சியால் 29-01-2005ல் இலண்டனிலும் 18-02-2005ல் கனடாவிலும் 05-03-2005ல் ஜேர்மனியிலும் அம்மையாரின் 80வதுஅகவைஅறநிதிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

## நன்றி கூறுகின்றோம்

- மதிப்பார்ந்த யாழ் அரசாங்க அதிபர் அவர்கள்.
- வலிவடக்கு பிரதேச செயலர் அவர்கள், தெல்லிப்பழை, துர்க்காபுரம் கிராம சேவையாளர்கள்.
- அன்பளிப்புக்களை காலத்துக்குக் காலம் வழங்கி ஆதரவு தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள்.
- அன்னதானம் வழங்குவதற்கு ஆதரவு தருகின்ற அறக் கொடையாளர்கள் வர்த்தகப் பெருமக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சரியைத் தொண்டுகள் ஆற்றும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பெண்கள் தொண்ட சபையினர் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர்.

* இலங்கை வங்கி சுன்னாகம், பம்பலப்பிட்டி கிளைகள். வர்த்தகவங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம் கிளைகள், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம், யாழ்ப்பாணம், மானிப்பாய், திருநெல்வேலி, வெள்ளவத்தை கிளைகள் மக்கள் வங்கி காங்கேசன்துறை,சுன்னாகம் கிளைகள், கற்றன் நஷனல் வங்கி சுன்னாகம்.

* தேவஸ்தான சார்பில் வங்கிக் கடமைகளை கொழும்பில் நிறைவேற்றித்தரும் தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினர் திரு. சி. புஸ்பநாதன்.

* தேவஸ்தான திருப்பணி மற்றும் அன்னதானப் பணிகளுக்கு உதவி புரிந்துவரும் நிர்வாகசபை உறுப்பினர் திரு. ச. ஆறுமுகநாதன் அவர்கள்.

* உதயன், வலம்புரி, தினக்குரல், தினகரன், வீரகேசரி, யாழ்தினக்குரல் ஆசிரியர்கள், நிருபர்கள்.

* வருடந்தோறும் மகோற்சவ விஞ்ஞாபனத்தின் ஒருபகுதியை அழகுற அச்சிட்டு அன்பளிப்பாக வழங்குகின்ற திரு. K. அருளானந்தம் அனுஷ்பிரின்டர்ஸ் சுதுமலை.

* இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு. யாழ்சேவை பணியாளர்கள்.

* மல்லாகம் கிருபா போட்டோ நிறுவனம், சுன்னாகம் யோகா போட்டோ நிறுவனம்.

* இலங்கை மின்சார சபை யாழ் சுன்னாகம் உத்தியோகத்தர்கள்.

* தேவஸ்தான நீர்மின் வேலைகளைச் சீர்செய்துதரும் திரு. த. தயானந்தன், திரு. மா. சௌந்தரராஜன் ஆகியோர்.

* யாழ் பிராந்திய ரெலிகொம் நிறுவனத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ யாழ் இலங்கை போக்குவரத்து சபையினர், சிற்றூர்தி உரிமையாளர் சங்கத்தினர்.

❋ வலிவடக்கு பிரதேசசபை, சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்கள், தெல்லிப்பழைப் ப. நோ. கூ. சங்கத்தலைவர், பணியாளர்கள்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி
தலைவர்.

திரு. அ. சண்முகநாதன்
பொருளாளர்.

திரு. சு. ஏழூர்நாயகம்
உப பொருளாளர்.

திரு. நா. தவநாதன்
திரு. ஆறு. திருமுருகன்.
இணைச்செயலாளர்.

வைத்திய கலாநிதி திரு. தி திவாகரன்
பொதுச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

## 31 மார்கழி 2005 இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் |
|---|---|---|---|
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | 01 | | 19,234,760.09 |
| **முதலீடு** | | | |
| திருமகள் அழுத்தகம் | | 1,100,000.00 | |
| நிலையான வைப்பு | 02 | 11,317,484.53 | 12,417,484.53 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| திருவாபரணங்கள் | 03 | 869,436.50 | |
| பித்தளைப்பொருட்கள் | | 43,033.00 | |
| சேமிப்பு வைப்பு | 04 | 12,980,224.36 | |
| வங்கி மீதி | 05 | 2,035,018.49 | |
| காசு மீதி | | 11,417.21 | 15,939,129.56 |
| | | | 47,591,374.18 |

| நிதிகளும் பொறுப்புக்களும் | | |
|---|---|---|
| பொது நிதி | 41,025,525.83 | |
| அறக்கட்டளை நிதி | 2,776,600.00 | |
| ஒதுக்கு நிதி | 1,543,262.35 | |
| கட்டிட நிதி | 2,185,450.00 | 47,530,838.18 |
| **பொறுப்புக்கள்** | | |
| துர்க்காபுரம் மகளிர் இல்லம் | 34,836.00 | |
| சிவத்தமிழ்ச்செல்வி பிறந்ததின அறநிதியம் | 25,700.00 | 60,536.00 |
| | | 47,591,374.18 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் மேலே காட்டப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்து கின்றோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி J.P
..................................
தலைவர்.

அ. சண்முகநாதன்
..................................
தனாதிகாரி.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 31.12.2005 இல் உள்ள ஐந் தொகையும், அவ் ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கும், பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு, நிதிநிலை மாற்றக் கூற்றும் எம்மால் பரீசீலனை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இவை கணக்கேடுகளுக்கு அமைவாக உள்ளன. என்பதை உறுதிப்படுத்து கின்றோம். அத்தோடு இவற்றுக்குரிய ஆவணங்களைப் பரிசீலித்து அவை சரியான முறையில் உள்ளன என்பதையும், மேலும் மேற்குறிப் பிட்ட கணக்குக் கூற்றுகள் தேவஸ்தானத்தின் நிதிநிலையையும், வருமானச் செலவினையும் சரியான முறையில் பிரிதிபலிக்கின்றன என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

திகதி:- 17-07-2006
யாழ்ப்பாணம்

ச.செல்வேந்திரா அன்கோ
..................................
பட்டயக்கணக்காளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

## 31 மார்கழி 2005 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு.

| | குறிப்பு | தொகை | தொகை |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| கோவில் நாளாந்த நிகழ்வுகள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 2,994,236.05 |
| உண்டியல்கள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 940,670,00 |
| மகோற்சவம் | (பெ.கொ.க;குஇன் படி) | | 757,622.50 |
| விசேட நிகழ்வுகள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 768,538.00 |
| நானாவித வரவுகள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 130,209.60 |
| நன்கொடை | (பெ.கொ.க;குஇன் படி) | | 4,163,521.87 |
| **அன்னதானம்** | | | |
| வரவு - துர்க்காதேவி ஆலயம் | | 2,265,038.85 | |
| நல்லூர் மணிமண்டபம் | | 526,650.00 | |
| மகோற்சவம் | | 445,205.00 | |
| செலவு- துர்க்காதேவி ஆலயம் | | (1,011,993.00) | |
| நல்லூர் மணிமண்டபம் | | (502,303.00) | |
| மகோற்சவம் | | (470,005.50) | 1,252,592.35 |
| **திருமணம்** | | | |
| வரவு | | 985,000.00 | |
| செலவு | | (672,480.00) | 312,520.00 |
| வட்டி - வைப்பு | 06 | | 942,150.10 |
| | | | 12,262,060.47 |

**செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| கோவில் நாளாந்த நிகழ்வுகள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 1,421,320.00 |
| மகோற்சவம் | (பெ.கொ.க;குஇன் படி) | | 878,227.50 |
| விசேட நிகழ்வுகள் | (பெ.கொ.க;குஇன் படி) | | 689,083.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திருப்பணி | | | 282,831.80 |
| சம்பளம் | | | 1,188,800.00 |
| விசேட கொடுப்பனவு | | | 295,800.00 |
| சேம உதவி தொகை | | | 103,356.00 |
| உபசரணை | | | 66,493.00 |
| நிர்வாகச் செலவு | | | 1,172,964.60 |
| கணக்காய்வுக் கட்டணம் | | | 27,000.00 |
| அன்பளிப்பு | 07 | | 1,190,507.50 |
| அருள்ஒளி சஞ்சிகை | | | |
| செலவு- 316,890.00 | | | |
| வரவு - 100,900.00 | | 215,990.00 | |
| சமூகமேம்பாட்டு பணிகள் | | 130,706.00 | |
| யாத்திரிகர் விடுதி (பெ.கொ.க;குஇன் படி) | | 156,045.50 | |
| பெறுமானத்தேய்வு | 01 | 376,009.25 | 8,195,133.65 |
| செலவிலும் கூடிய வருமானம் பொதுநிதிக்கு மாற்றம் | | | 4,066,926.82 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை
## 31 மார்கழி 2005 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| **01-01-2005இல்மீதிகள்** | | | |
| நிலையான வைப்புகள் | | 9,617,484.53 | |
| சேமிப்பு வைப்புக்கள் | | 11,352,574.19 | |
| வங்கி மீதி | | 1,581,578.19 | |
| காசு மீதி | | 52,275.61 | 22,603,912.52 |
| **பெறுவனவுகள்** | | | |
| கோவில் நாளாந்த நிகழ்வுகள் | | | |
| அர்ச்சனை - கருமபீடம் | 1,524,332.05 | | |
| தபாற் செலவு | 21,585.00 | | |
| உபயம் | 1,001,824.00 | | |
| நூல் வழங்கல் | 170,125.00 | | |
| நித்திய பூசை | 37,730.00 | | |
| இறுவெட்டு(உன) விற்பனை | 98,800.00 | | |
| தேவி படப்பிரதிகள் விற்பனை | 94,150.00 | | |
| புத்தக விற்பனை | 45,690.00 | 2,994,236.05 | |
| உண்டியல் | | 940,670.00 | |
| அன்பளிப்பு | | 4,163,521.87 | |
| அன்னதானம் -துர்க்காதேவி ஆலயம் | 2,265,038.85 | | |
| அன்னதானம் -நல்லூர் மணிமண்டபம் | 526,650.00 | | |
| அன்னதானம் -மகோற்சவம் | 445,205.00 | 3,236,893.85 | |
| மகோற்சவம் | | | |
| கொடியேற்றம் | 216,781.50 | | |
| உபயம் | 263,029.00 | | |
| பொது வரவு | 277,812.00 | 757,622.50 | |
| விசேட நிகழ்வுகள் | | | |
| இலட்சார்ச்சனை | 225,588.00 | | |
| அபிராமிப்பட்டர் விழா | 10,000.00 | | |
| நவராத்திரி | 60,800.00 | | |
| கேதார கௌரி நோன்பு | 359,800.00 | | |
| திருவிளக்கு பூசை | 5,100.00 | | |
| வரலட்சுமி நோன்பு | 89,750.00 | | |
| திருவெம்பாவை | 17,500.00 | 768,538.00 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திருமணம் | | 985,000.00 | |
| பவுண் விற்பனை | | 977,340.00 | |
| பெற்ற வட்டி | | 967,850.10 | |
| அருள் ஒளி சஞ்சிகை விற்பனை | | 100,900.00 | |
| மகளிர் இல்ல வரவு | | 34,836.00 | |
| **நானாவித வரவு** | | | |
| கோசாலை | 6,850.00 | | |
| தோட்டவேலை | 6,297.00 | | |
| சைவத்தமிழ் ஆய்வு நூலகம் | 500.00 | | |
| யாத்திரிகர் விடுதி | 49,500.00 | | |
| வாடகை | 24,000.00 | | |
| சுனாமி அனர்த்தம் | 31,022.60 | | |
| பொருட்கள் விற்பனை | 12,040.00 | 130,209.60 | 16,057,617.97 |
| **அறக்கட்டளை வரவு** | | | 1,700,000.00 |
| **கொடுப்பனவுகள்** | | | |
| ஆலய நாளாந்த நிகழ்வுகள் | | | |
| நித்திய பூசை | 68,207.00 | | |
| உபயம் | 1,165,673.00 | | |
| நூல் வழங்கல் | 11,200.00 | | |
| இறுவெட்டு (CD) கொள்வனவு | 113,380.00 | | |
| அம்பாள் படப்பிரதிகள் | 62,860.00 | 1,421,320.00 | |
| **பொது அன்பளிப்பு** | | 1,190,507.50 | |
| அன்னதானம் துர்க்காதேவி ஆலயம் | 1,011,993.00 | | |
| அன்னதானம் நல்லூர் மணிமண்டபம் | 502,303.00 | | |
| அன்னதானம் மகோற்சவம் | 470,005.50 | 1,984,301.5 | |
| **மகோற்சவம்** | | | |
| கொடியேற்றம் | 37,201.00 | | |
| உபயம் | 346,608.00 | | |
| பொதுச் செலவு | 494,418.00 | 878,227.00 | |
| **விசேட நிகழ்வுகள்** | | | |
| இலட்சார்ச்சனை | 222,240.00 | | |
| அபிராமிப்பட்டர் விழா | 4,520.00 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நவராத்திரி | 81,144.00 | |
| கோதார கௌரி நோன்பு | 166,659.00 | |
| திருவிளக்கு பூசை | 4,404.00 | |
| வருடப்பிறப்பு | 83,955.00 | |
| தீபாவளி | 48,452.00 | |
| ஆறுமுகநாவலர் குருபூசை | 11,486.00 | |
| புராணபடனப்பூர்த்தி | 20,980.00 | |
| வரலட்சுமி நோன்பு | 36,743.00 | |
| மணவாளக் கோலம் | 8,500.00 | 689,083.00 |
| திருமணம் | | 672,480.00 |
| அருள்ஒளி சஞ்சிகை | | 316,890.00 |
| யாத்திரிகர் விடுதி | | 2,059,275.50 |
| அறக்கட்டளை | | 1,500,000.00 |
| சம்பளம் | | 1,188,800.00 |
| சேம உதவு தொகை | | 103,356.00 |
| விசேட கொடுப்பனவு | | 295,800.00 |
| உபசரனை | | 66,493.00 |
| திருப்பணி | | 282,831.80 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 27,000.00 |
| | | 12,676,365.30 |

## நிர்வாகச் செலவுகள்

| | |
|---|---|
| திருத்தமும் பராமரிப்பும் | 131,361.00 |
| பிரயாணச் செலவு | 37,565.00 |
| போட்டோ பிரதி | 5,081.00 |
| கூலி | 12,358.00 |
| தபாற் செலவு | 105,521.00 |
| ஆவணப்படுத்தல் செலவு | 10,487.00 |
| காகிதாதி, புதினப்பத்திரிகைகள் | 54,031.00 |
| அச்சுக்கூலி | 126,300.00 |
| மின் இணைப்பு | 91,401.00 |
| நீர் இணைப்பு | 9,580.00 |
| வங்கிக்கட்டணமும் பற்றுவரியும் | 4,909.00 |
| பிறின்ரர் | 7,100.00 |
| பாவனைப் பொருட்கள் | 2,199.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| மின் கட்டணம் | 495,800.00 | | |
| தொலைபேசிக் கட்டணம் | 24,600.00 | | |
| தோட்ட வேலை | 54,671.60 | 1,172,964.60 | |
| **சமூக மேம்பாட்டுப் பணிகள்** | | | |
| அறநெறிப் பாடசாலை | 39,235.00 | | |
| சிவத்தமிழ்செல்வி | | | |
| சைத்தமிழ் ஆய்வு நூலகம் | 91,471.00 | 130,706.00 | |
| நிலையானசொத்துக்கள் கொள்வனவு | | 37,350.00 | 14,017,385.90 |
| | | | **26,344,144.59** |

| | | |
|---|---|---|
| **31.12.2005 இல் மீதிகள்** | | |
| நிலையான வைப்புக்கள் | 11,317,484.53 | |
| சேமிப்பு வைப்புக்கள் | 12,980,224.36 | |
| வங்கி மீதி | 2,035,018.49 | |
| காசு மீதி | 11,417.21 | 26,344,144.59 |
| | | **26,344,144.59** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

## நிதி நிலை மாற்றக் கூற்று

| விபரம் | பொதுநிதி | அறக்கட்டளைநிதி | ஒதுக்குநிதி | கட்டிடநிதி | ஒலிபெருக்கிநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01-01-2004இல் உள்ள மீதிகள் | 30,392,699.54 | 1,376,600.00 | 1,543,262.35 | 2,173,850.00 | 70,000.00 | 35,556,371.89 |
| **2004 இல் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | |
| செலவிலும் கூடிய வருமானம் | 4,854,302.47 | | | | | 4,854,302.47 |
| பவுண் அன்பளிப்பு | 783,600.00 | | | | | 783,600.00 |
| இவ்வருட சேர்ப்பு | | 1,200,000.00 | | 11,600.00 | | 1,211,600.00 |
| 31-12-2004இல் மீதிகள் | 36,030,562.01 | 2,576,6000.00 | 1,543,262.35 | 2,185,450.00 | 70,000.00 | 42,405,874.36 |
| **2005 இல் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | | |
| பவுண் அன்பளிப்பு | 858,037.00 | | | | | 858,037.00 |
| செலவிலும் கூடிய வருமானம் | 4,066,926.82 | | | | | 4,066,926.82 |
| ஒலிபெருக்கி நிதி மாற்றம் | 70,000.00 | | | | (70,000.00) | |
| இவ்வருட வைப்பு | | 200,000.00 | | | | 200,000.00 |
| 31-12-2005 இல் மீதிகள் | 41,025,525.83 | 2,776,600.00 | 1,543,262.35 | 2,185,450.00 | | 47,530,838.18 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு - 02

நிலையான வைப்பு

| விபரம் (வங்கியின் பெயர்) | பொது வைப்பு | அறக்கட்டளை வைப்பு | ஒதுக்குநிதி வைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட வர்த்தகவங்கி | | | | |
| - யாழ்ப்பாணம் | 3,255,284.53 | 1,565,000.00 | | 4,820,284.53 |
| தேசிய சேமிப்பு வங்கி | | | | |
| - யாழ்ப்பாணம் | 62,200.00 | 710,000.00 | 600,000.00 | 1,372,200.00 |
| - சுன்னாகம் | 275,000.00 | 3,100,000.00 | 225,000.00 | 3,600,000.00 |
| - வெள்ளவத்தை | 150,000.00 | | | 150,000.00 |
| இலங்கை வங்கி | | | | |
| - சுன்னாகம் | 400.000.00 | 25,000.00 | | 425,000.00 |
| - பம்பலப்பிட்டி | 400,000.00 | | | 400,000.00 |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி | | | | |
| - சுன்னாகம் | | 350,000.00 | | 350,000.00 |
| ஹட்டன் நசனல் வங்கி | | | | |
| - சுன்னாகம் | | 20,0000.00 | | 20,0000.00 |
| மொத்தம் | 4,542,484.53 | 5,950,000.00 | 825,000.00 | 11,317,484.53 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை

குறிப்பு - 04
சேமிப்பு வைப்புகள்

| விபரம் (வங்கியின் பெயர்) | கணக்குஇலக்கம் | 01-01-2005 இல் மீதி | வட்டி வரவு | 31-12-2005 இல் மீதி |
|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | | | | |
| - சுன்னாகம் | 10072-01-8054-8 | 1,657,619.57 | 84,804.45 | 1,742,424.02 |
| - யாழ்ப்பாணம் | 10006-02-7225-6 | 1,114,247.51 | 78,312.54 | 1,202,560.05 |
| - மானிப்பாய் | 10107-01-0126-5 | 109,776.34 | 5,613.97 | 115,390.31 |
| - திருநெல்வேலி | 10108-01-0250-4 | 109,685.71 | 10,624.10 | 620,309.81 |
| - வெள்ளவத்தை | 1-0070-01-9628-2 | 1,446,617.71 | 85,549.16 | 1,532,166.87 |
| இலங்கை வங்கி | | | | |
| - சுன்னாகம் | 21913 | 2,665,366.17 | 128,684.15 | 2,794,050.32 |
| - பம்பலப்பிட்டி | 1000371118017 | 1,551,945.45 | 69,092.88 | 1,621,038.33 |
| ஹட்டன் நாசனல் வங்கி - சுன்னாகம் | 02000-72-901-4 (41) | 1,250,751.58 | 55,763.98 | 1,306,315.56 |
| வர்த்தக வங்கி | | | | |
| - யாழ்ப்பாணம் | 86000923701 | 1,397,174.15 | 99,404.94 | 1,996,579.09 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு - 05
வங்கி மீதி

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - சுன்னாகம் | 3155 | 524,545.16 |
| இலங்கை வங்கி - பம்பலப்பிட்டி | 003702003974 | 594,052.41 |
| வர்த்தக வங்கி - யாழ்ப்பாணம் | 1060012692 | 610,843.33 |
| வர்த்தக வங்கி - சுன்னாகம் | 110700214 | 305,577.59 |
| **மொத்தம்** | | **2,035,018.49** |

குறிப்பு - 07
அன்பளிப்பு

| | |
|---|---|
| கல்வி | 82,000.00 |
| கஷ்ட நிவாரணம் | 37,900.00 |
| நோயாளர் புலன்வலுவிழந்தோர் | 116,100.00 |
| பாடசாலை நிகழ்வுகள் | 175,000.00 |
| திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் விழா | 82,600.00 |
| மரணச்சடங்கு | 20,000.00 |
| ஆலயங்களுக்கான அறப்பணி | 300,000.00 |
| அறநிலையங்கள், பொதுநிறுவனங்கள் | 170,100.00 |
| நூல்வெளியீட்டு முதற்பிரதி | 47,000.00 |
| பொது அன்பளிப்பு | 59,807.50 |
| சுனாமி அனர்த்தம் | 100,000.00 |
| **மொத்தம்** | **1,190,507.50** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பிறந்ததின அறநிதியம்
## 31-12-2005 இல் உள்ளவாறான ஐந்தொகை

**சொத்துக்கள்**

**முதலீடு**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு- தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் | | 1,450,000.00 |

**நடைமுறைச் சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| சேமிப்பு வைப்புகள் | | |
| தேசிய சேமிப்பு வங்கி- யாழ்ப்பாணம் க/க இல. 1006-02-7248-5 | 1,074,336.28 | |
| தேசிய சேமிப்பு வங்கி- சுன்னாகம் க/கு இல. 10072-02-0916-3 | 1,490,343.60 | |
| தேவஸ்தான வருமதி | 25,700.00 | 2,590,379.88 |
| | | **4,040,379.88** |

**நிதிகள்**

| | | | |
|---|---|---|---|
| அறநிதி | | | |
| 01-01-2005 இல் மீதி | | 2,801,797.82 | |
| **கூட்டுக:-** இவ்வருட செலவிலும் கூடிய வருமானம் | | 61,045.71 | |
| | | 2,862,843.53 | |
| **கழிக்குக:-** இவ்வருட அறக்கொடை | | | |
| யாழ் மருத்துவபீடம் | 100,000.00 | | |
| புற்றுநோய் வைத்தியசாலை | 100,000.00 | 200,000.00 | |
| | | 2,662,843.53 | |
| தமிழ்க்குழந்தைகள் கருணை நிதியம் | | 1,377,536.35 | 4,040,379.88 |
| | | | **4,040,379.88** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதியத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளன என உறுதிப்படுத்துகின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியத்திற்கான 31-12-2005 இல் உள்ள ஐந்தொகை யும், அவ் ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கும் எம்மால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இவை கணக்கேடு களுக்கு அமைவாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம். அத்தோடு இவற்றுக்குரிய ஆவணங்களை பரிசீலித்து அவை சரியான முறையில் உள்ளன என்பதையும், மேலும் மேற்குறிப்பிட்ட கணக்குக் கூற்றுக்கள் பிறந்தநாள் அறநிதியத்தின் நிதி நிலமைகளையும், வருமானச் செலவுகளையும் சரியான முறையில் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

திகதி:- 17-07-2006
யாழ்ப்பாணம்.

**ச. செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியம் 31-12-2005 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அன்பளிப்பு | | | 239,373.00 |
| புத்தக விற்பனை | | | 50,200.00 |
| பெற்ற வட்டி | | | |
| நிலையான வைப்பு | | 84,000.00 | |
| தேவஸ்தானம் | | 25,700.00 | |
| சேமிப்பு வைப்பு | | 50,235.32 | |
| தமிழ்க்குழந்தைகள் கருணை நிதியம் | | 72,402.39 | 232,337.71 |
| | | | 521,910.71 |
| **செலவுகள்** | | | |
| நூல் வெளியீடு | | | |
| வாழ்க எம் அன்னை | 117,850.00 | | |
| சுந்தரர் தேவார பதிகங்கள் | 225,850.00 | 343,700.00 | |
| அன்பளிப்பு | | | |
| கடல் அலை பாதிப்புற்றோர் | 50,000.00 | | |
| நல்லைக்குரு மகா சந்நிதிதானம் | 1,000.00 | 51,000.00 | |
| விழாச் செலவு | | | |
| உணவு | 26,810.00 | | |
| ஒலி அமைப்பு | 8,500.00 | | |
| நிழற்படச் செலவு | 10,440.00 | | |
| அஞ்சற் செலவு | 10,000.00 | | |
| காகிதாதி, விஞ்ஞாபனம் | 5,815.00 | | |
| பிரயாணச் செலவு | 1,000.00 | | |
| பொது உபசாரம் | 3,200.00 | 65,765.00 | |
| பற்று வரி | | 400.00 | 460,865.00 |
| **செலவிலும் கூடிய வருமானம்** | | | 61,045.71 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவஸ்தான குருமார், பணியாளர்கள்

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் (சிவாச்சாரியார்)
சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள் (சிவாச்சாரியார்)
பிரம்மஸ்ரீ சு.சுந்தரராஜ சர்மா
பிரம்மஸ்ரீ கி.கணேசமூர்த்தி சர்மா
சிவத்திரு. சி.ஈஸ்வரதாஸ் ஐயா

## அலுவலகப் பணியாளர்கள்

திரு. கா.சிவபாலன்
செல்வி. ச.ரேவதி
திருமதி. உதயகுமார் மஞ்சுளா
திரு. வ. நடராஜா
திரு. வி. சிவகுமாரன்

## பணியாளர்கள்

திரு.வை. கணேசானந்தன்
திரு. ந. பரமேஸ்வரன்
திரு. சி. சண்முகானந்தம்
திரு. க. கந்தையா
திரு. பொ. தியாகசாரா
திரு. பொ. பாலகுமார்
திரு. வ. குணசேகரம்
திரு. ச. கிருஸ்ணகுமார்
திரு. வ. கந்தையா
திரு. நீ. நாகமுத்து
திரு. வே. பாக்கியமுத்து
திரு. சி. நாகர்

## திருமகள் அழுத்தகப் பணியாளர்கள்

திரு. ச. இராசரத்தினம்
திரு. ச. உமாசுதன்
திரு. சோ. யோகேந்திரம்
திரு. க. குகதாசன்
திரு. ந. விக்கினேஸ்வரன்
செல்வி. செ. நாகராணி
செல்வி. சு. கமலலோஜினி
செல்வி. நா. கிருபாலினி

## தேவஸ்தான தவில் நாதஸ்வர வித்துவான்

திரு. இ. இந்திரகுமார் குழுவினர், மல்லாகம்

## பூமாலை அலங்காரம்

திரு. வ.பஞ்சலிங்கம் பிள்ளைகள்

## பாதுகாப்புச் சேவை

திரு. க.சிவபாலசுந்தரம்
திரு. சி.சிவலிங்கம்
திரு. மா. சிவகுலம்
திரு. க. சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org